இணைப்பு III

[110ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1980-ம் ஆண்டு 2-வது காலாண்டில் வழங்கப்பட்ட ஒதுக்கீடான 4,11,000 மெட்ரிக் டன்களுக்கு மாறாக மின்சக்தி மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் சேர்த்து பொது விநியோகத்திற்காக தமிழ்நாட்டிற்கு கீழ்க்கண்டவாறு சிமெண்ட் ஒதுக்கப்பட்டது :—

ஒதுக்கீடு :

3-வது காலாண்டு, 1980	3,51900 மெட்ரிக் டன்கள்
4-வது காலாண்டு 1980	3,79,400 ”
1-வது காலாண்டு 1981	3,95,400 ”

ஒரு காலாண்டிற்கு (1) பொது விற்பனை வகை (2) ஒதுக்கீடு வகை (3) இதர ஒதுக்கீட்டு வகை ஆகியவற்றின் கீழ் மாநிலத்திற்கு தேவைப்படுகின்ற சராசரித்தேவை பின்வருமாறு :—

1. பொது விற்பனை வகை	3,28,500 மெட்ரிக் டன்கள்.
2. ஒதுக்கீட்டு வகை	3,38,800 ”
3. இதர ஒதுக்கீட்டு வகை	1,00,000 ”
காலாண்டு	7,67,300

இதற்கு மாறாக, கடந்த மூன்று காலாண்டுகளுக்கு ஒவ்வொரு இனத்திற்கும் ஒதுக்கப்பட்ட சிமெண்ட்டின் அளவு வருமாறு :—

	1980 3-ம் காலாண்டு	1980 4-ம் காலாண்டு	1981 முதல் காலாண்டு
1. பொது விற்பனை வகை	1,61,150	1,60,000	2,00,000
2. ஒதுக்கீட்டு வகை	83,750	53,726	70,500
3. இதர ஒதுக்கீட்டு வகை	48,000	34,804	43,400

2. மாநிலத்திற்கு சிமெண்ட் ஒதுக்கீடு போதுமானதாக இல்லாமையால் கிடைக்கின்ற அளவினைப் பொறுத்து பல்வேறு வகைகளுக்கு துணை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டத்திற்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் பொது விற்பனை வகையின் கீழ் வேண்டிய சராசரித் தேவையான 15,000 மெட்ரிக் டன்களுக்கு மாறாக 1980-ம் ஆண்டு 3 மற்றும் 4 காலாண்டு 1981-ம் ஆண்டு முதல் காலாண்டு ஆகியவற்றில் பொது விற்பனை வகையின்கீழ் தென்னாற்காடு மாவட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு சிமெண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

3/80	6,000 மெட்ரிக் டன்கள்.
4/80	4,300 மெட்ரிக் டன்கள்.
1/81	5,000 மெட்ரிக் டன்கள்.

3. ஒதுக்கீட்டு வகை மற்றும் இதர ஒதுக்கீட்டு வகைகளின் உடனடித் தேவையினை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதற்கு 1,00,000 மெட்ரிக் டன்கள் கூடுதல் ஒதுக்கீடு வேண்டுமென தமிழ்நாடு அரசு 8—3—1981 அன்று தொலை வழிச் செய்தி மூலம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

4. மீண்டும் இவ்வரசு 19—2—1981 அன்று ஒதுக்கீட்டு வகையின் கீழ் மொத்த நுகர்வோர்களின் உடனடித் தேவையில், 20 சதவிகிதமாவது நிறைவேறுவதற்கு உடனடியாக 50,000 மெட்ரிக் டன் சிமெண்ட் வழங்கவேண்டுமெனவும், இதனை 1981-ம் ஆண்டு இரண்டாவது காலாண்டு ஒதுக்கீட்டில் சரிக்கட்டிக் கொள்ளலாமெனவும் இந்திய அரசினை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

5. இதன் காரணமாக மத்திய அரசு தமிழகத்திற்கு 20,000 டன் சிமெண்ட் இந்த காலாண்டிற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் இந்த கூடுதல் ஒதுக்கீடு 1981-ம் ஆண்டு இரண்டாம் காலாண்டிற்கான ஒதுக்கீட்டில் ஈடு செய்து கொள்ளப்படும். எனவே கூடுதலாக கிடைத்துள்ள சிமெண்ட்டைக் கொண்டு தேவையின் அடிப்படையில் எல்லா நுகர்வோர்களுக்கும் ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS